80



# சிறுபுத்தகத்தால் வரும் பலன்.

அற்பசிப்பி முத்தைத் தரும், சிறியமுத்து அதிக பொன்னைப் பெறும். அற்ப கரி வச்சிரத்தை விளைவிக்கும். வச்சிரம் லோகத்தைக் கொள்ளும்.

மலையில் விழுஞ் சிறுதூறல் பெருவெள்ளமாய், அருவியாய், சிற்றாறாய், வாய்க்கால்கள் வழியாய் வயல்கள் தோறும் பரந்து அங்குள்ள பயிர் வகைகளைச் செழிப்பாக்கி நானாவித சீவன்களுக்கும் வேண்டிய போசன பானத்தைக் கொடுத்துப் பெருநதியாய் ஓடிக் கடலை நிரப்பிக் கப்பல் ஓடக் காரணமாகும்.

வேத கற்பனை பத்துக்குள்ளே சகல வேதாகமங்களும் அடங்கும். உன் பூரண இருதயத்தோடும், உன் பூரண ஆத்துமத்தோடும், உன் பூரண மனதோடும், உன் பூரண பலத்தோடும் உன் தேவனாகிய கர்த்தாவிடத்தில் அன்புகூருவாயாகவென்றும், உன்னைப்போலப் பிறனை நேசிப்பாயாகவென்றும் சொல்லப்பட்ட கற்பனைகளில் வேதம் முழுவதும் தருமநூல்களும் அடங்கும்.

அதுபோல ஒரு சிறுபுத்தகம் தேவலட்சணம், ஆத்துமலட்சணம், பாவலட்சணம், பாவப்பரிகாரலட்சணம் முதலியவற்றைச் சூக்குமமாய்த் தனக்குள்ளே அடக்கித் தன்னை வாசிக்கிறவனுடைய மனதை அலர்த்தி மேற்சொல்லிய இலட்சணங்களை ஸ்தூலமாய்க் கொண்டிருக்கிற வேதாகமத்தைத்தேடி வாசிக்கவும், தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்படவும், சற்குருவைத்தேடி அவரைப் பற்றிக்கொள்ளவும் பண்ணும்.

உலகமெங்கும் வழங்குஞ் சொற்களும் அவைகள் விளக்கும் பொருள்களும் சில்வகை எழுத்துக்களில் அடங்கியிருக்கின்றன. ஒரு சிறிய கண்ணாடி பெரிய உருபங்களைத் தன்னுள்ளே காட்டும். தூரதிட்டிக்கண்

றொடி மகாதூரத்திலுள்ள உலகங்களையும், சூரிய சந்திரன் முதலிய வான சோதிகளையுங்கிட்டமானத்திற்காட்டும். ஒரு சிறிய படம் பெரிய உலகங்களைக் காட்டும். சொற்பமருந்து பெரிய நோய்களைத் தீர்க்கும். சொற்ப பொறி பெரிய பசுங்காடுகளைக் கொளுத்தும். ஒரு சிறிய குண்டு பெரிய மதிலைத் தகர்க்கும். கொஞ்ச மருந்து தாணித்த ஒரு வெடிகுண்டு அனந்த சனங்களைக் கொல்லும். அற்ப திரியிற் பற்றிய விளக்கு வெகு இருட்டை அகற்றும். அதுபோல ஒரு சிறுபுத்தகத்திலிருக்கிற ஒரு சிறுசொல் ஒரு மனிதனுடைய இருதயகடினத்தைச் சின்னாபின்னமாக உடைத்து அதின் இருளை அகற்றி அதிலுள்ள பாவங்களை விளங்கப்பண்ணும்.

ஒரு சிறுகத்தி ஒரு பெரிய கட்டிலுள்ள சீழ்களெல்லாம் ஒடத்தக்க துவாரம் அறுக்கமாட்டாதா? ஒரு சிறுசொழுக்கி ஒருவனுடைய கண்ணிற்படலங்களை உரிக்கிறதில்லையா! இப்படியிருக்க இருபுறமுங் கருக்குள்ள வேதவசனத்தின் ஒருசொல் ஒரு சிறு புத்தகத்திலிருந்து அநேக ஆத்துமாக்களைச் சீர்ப்படுத்தி நித்திய சீவனுக்கு ஊற்றாகாதா?

இன்னும் சிறுபுத்தகங்களிலே கிறிஸ்துநாதர் தேவநியமப்படி மனுஷனாக வந்தாரென்றும், முன்சொன்ன தீர்க்கதரிசன வாக்கின்படி அவருடைய சனனமுதல் மரண பரியந்தமும் நடந்ததென்றும், அவர் பிரேதக்குழியைவிட்டெழுந்து மோட்சலோகஞ்சேர்ந்து நமக்கு மகா ஆசாரியனாகவுந் தேவனாகவும் இருக்கிறாரென்றும், சருவரையும் நடுத்தீர்ப்பதற்கும், அவபத்தரைத் தள்ளிப் பத்தரை அழைப்பதற்கும் திரும்பி வருவாரென்றும், இருவகை ஏற்பாடுகளிலுமுள்ள சாரங்களை எடுத்துச் சுருக்கிச் சொல்லியிருக்கும். இவைகளை எல்லாம் அறியாமையுள்ள ஒருவன் வேதத்திலே இலகுவாய்க் கண்டுபிடிப்பானோ? இப்படிப்பட்ட சிறுபுத்தகங்கள் ஒரு குருவாகிலும் உபதேசியாகிலும் இல்லாத தேசங்களுக்குப் போகிறதல்லவா? அதிக விலைபெற்ற வேதபுத்தகங்களைக் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவர் கைக்குங் கொடுக்கிறார்களா? குருமார் ஒவ்வொரு மனுஷ

ளையுங் கண்டு பேசுகிறார்களா? இல்லையே. ஒரு மனுஷன் தன் கருத்தைக் காகிதவழியாய் எங்கும் அறிவிக்கிறது எத்தனை சுறுக்கு. எத்தனை இலகு. அவன் அப்படிச் செய்யாமற் தன் கருத்தைத் தானே போய் யாவருக்கும் அறிவிக்கத் துணிந்தால் எத்தனை காலத்தில் அறிவிப்பான்? அவன் ஆயுள் போதாதே.

இப்படியே குருவுக்கும் உபதேசிக்கும் முடியாதசெயல்களைச் செய்து முடிப்பது சிறுபுத்தகந்தான். ஒரு சிறிய சுக்கானைக்கொண்டு பெரிய கப்பல்களை ஓட்டுகிறதில்லையா? இரண்டு சிறிய ஈர்க்கு நான்குகுடந் தண்ணீரைத் தூக்குகிறதில்லையா? ஒரு சின்ன அச்சாணி ஒரு பெரிய இரதத்தை நடத்துகிறதில்லையா? இப்படியே ஒரு சிறுபுத்தகங் குருவுக்குங் கிறிஸ்தவர்களுக்கும் உபயோகமாயிருந்து அவர்கள் வேலையை நடப்பிக்கிறது. இந்தச் சிறுபுத்தகமில்லாத சங்கங் கொழுவில்லாத ஏராளன். இதுவே நாவில்லாத உபதேசி.

இதுநித்த நித்தியமென்ற சொல்லைச் சிறுபுத்தகத்திற் கண்டவுடனே மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினவர்களில்லையா? தேவாராதனைச் சங்கத்துக்குப் போகேனென்று சங்கற்பம் பண்ணியிருந்தவர்கள் வழிப்போக்கில், யேசு ஒருவரே இரட்சகரென்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் அவரை விசுவாசிக்கவில்லையா? தேவாராதனைச் சங்கத்தைக் குழப்ப எண்ணிப்போனவர்கள் தேவநீதி வழுவாதென்ற வாக்கைக்கேட்டு அஞ்சித் தேவன் அண்டை திரும்பினதில்லையா? இப்படியிருக்கச் சிறுபுத்தகங்களிலே பலன் என்னவென்று கேட்பதோ? கேட்பது சரியல்ல. சிறுபுத்தகவழியாய்ப் பாவிகள் மனந்திரும்பின சங்கதிகளை நாம் வாசிக்கவில்லையா? சிறுபுத்தகங்களினாலே அநேக கன்னெஞ்சருடைய கன்மனங் கரைந்து கிறிஸ்துஅண்டை திரும்பினதை நாம் கண்டதில்லையா? நமது கடினமனதைக் கரைக்க வல்ல பரிசுத்தாவிக்கு இடங்கொடுப்போமாக. நமது பாவத்தைப் பரிகரிக்க வல்ல கிறிஸ்துவினிடத்தில் அடைக்கலமாக ஓடுவோமாக. யெகோவா அக்கிரமக்காரரைப் பட்சிக்கும் அக்கினி. (உபா. 4:

25.) மனிதருடைய இரட்சிப்புக் கல்வியிலே இல்லை. யெகோவா தம்மை ஞானிகளுக்குங் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கும் பேதையருக்கும் வெளிப்படுத்துகிறார். அவர் நம்மை அழைக்கிறார். அவரிடத்துக்குப்போய் அவருக்கு நமது மனதை நைவேத்தியமாக ஒப்புவிப்போமாக. அவர் தூரத்திலுள்ளவரல்ல. சமீபத்திலிருக்கிறார். நாம் பலதேசங்களுக்கும் போகவேண்டாம். அவர் எங்குமிருக்கிறார். நாம் நமது சரீரங்களை வருத்தவேண்டாம். அது அவருக்குப் பிரியமில்லை. அவரை மனதினாலே பூசிப்போமாக. நமது பாவங்களுக்காக மனஸ்தாபப்படுவோமாக. நமக்குப் பிராயச்சித்தபலியான கிறிஸ்துவைப் பற்றிக்கொள்வோமாக. இதுவே சமயம், இதுவே நற்பிரியகாலம் என்கிற சொற்கள் வாசிக்கிறவனுடைய மனதை அசையாதா? கேட்கிறவனுடைய மனதை உருக்காதா? அவன் மோட்சவழிக்குத் தன் மனதைத் திருப்பானோ? பாருங்கள், இவைகளே சிறுபுத்தகப் பலன்.

வாசிக்கிறவர்களே, இவ்வகைப் பலன்களைப் பெற்றுக்கொண்டீர்களா? இல்லாதிருந்தால் ஆருடைய தவறு? உங்கள் அசட்டையின் கேட்டைச் சிறுபுத்தகத்தில் ஏற்றலாமா? கூருள்ள கத்தி ஆயுதபரீட்சையில்லாதவன் கையிலிருந்தால் அவனைக் கொல்லும். அது அவன் குற்றமேயல்லாமற் கத்தியின்குற்றமல்ல. கூருள்ள கத்தியை எடுத்துக் கல்லைப் பிளந்தாற் கத்திசேதப்படும். அது கத்தியின் குற்றமல்ல. அதுபோலச் சிறுபுத்தகங்களை எடுத்து அவ பாவனைபண்ணி மருந்துகட்டிப் பட்டம் ஒட்டிக் கெடுத்ததினால் வருந் தோஷம் புத்தகத்துக்கல்ல, புத்தகத்தைச் சேதப்படுத்தினவனுக்கே ஆகும்.

---

Printed for the Jaffna Religious Tract Society,
Strong and Asbury Printers, Manippay, 1877.
2nd Edition 5,000, total copies, 10,000,